பணியாளர் மற்றும் நிர்வாக
சீர்திருத்தத் (கே) துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009.
**புரட்டாசி 29, திருவள்ளுவர் ஆண்டு, 2039**

**கடித (டி) எண். 190, நாள் 15.10.2008**

அனுப்புநர்
முனைவர் குத்சியா காந்தி, இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாள

பெறுநர்
தலைவர்,
ஆசிரியர் தேர்வு வாரியம்,
கல்லூரி சாலை, சென்னை–06.

இயக்குநர்,
முன்னாள் படைவீரர்கள் நலத்துறை,
22, இராஜா முத்தையா சாலை, சென்னை–3.

செயலர்,
தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம்,
சென்னை–2.

சிறப்புஆணையர் மற்றும் ஆணையர்,
வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறை,
கிண்டி, சென்னை–32.

ஐயா,

பொருள்: பொதுப்பணிகள் – முன்னுரிமை – வேலை வாய்ப்பு நிறுவனங்கள்மூலம் பரிந்துரைக்கப்பட்டு, நிரப்பப்படும் பதவிகளில் ஆதரவற்ற விதவைகள் மற்றும் முன்னாள் இராணுவத்தினருக்கு முன்னுரிமை நீட்டிப்பது – தெளிவுரை வழங்கப்படுகிறது.

பார்வை:
1) அரசாணை (நிலை) எண். 188, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை, நாள் 28.12.76.
2) தலைவர், ஆசிரியர் தேர்வு வாரிய கடித எண். 3980/B2/02, நாள் 28.10.2002, 13.12.2002, 12.3.2003, 11.7.2003 மற்றும் 4.11.2003.
3) செயலர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வணையம் 5640/RND D2/2004, நாள் 9.11.2004.
4) தலைவர், ஆசிரியர் தேர்வு வாரிய கடித எண். 199/B2/2004, நாள் 2.9.2005.
5) வேலைவாய்ப்பு (ம) பயிற்சி, சிறப்பு ஆணையர் (ம) ஆணையரின் கடித எண். ப.ப.1/23124/2006, நாள் 20.10.2006.

*******

பார்வை ஒன்றில் காணும் அரசாணையில் முன்னாள் இராணுவத்தினர், ஆதரவற்ற விதவைகள் உள்ளிட்ட சில பிரிவினருக்கு வேலை வாய்ப்பகம் மூலம் பரிந்துரைக்கப்பட்டு, பணி

நியமனம் செய்யப்படும் பதவிகளில், முன்னுரிமை வழங்கும் பொருட்டு, முன்னுரிமைப் பட்டியல் தயார் செய்து ஆணைகள் வெளியிடப்பட்டன.

2. மேற்சொன்னவாறு முன்னுரிமை முறை அளிக்கப்படுவதால், அரசின் இடஒதுக்கீட்டுக் கொள்கையை, இம்முன்னுரிமை முறை பாதிக்கிறது என்பதாலும், இதைத் தவறாகப் பயன்படுத்துவதற்கு வாய்ப்புள்ளது என்பதாலும், ஆட்தேர்வு செய்யும் பல்வேறு நிறுவனங்கள் மற்றும் தொழிலாளர் வேலைவாய்ப்புத் துறை ஆகியவற்றை கலந்தாலோசித்து முன்னுரிமை முறையை முற்றிலும் மறு ஆய்வு செய்யப்படலாம் என்றும் இம்முன்னுரிமைமுறை 1976 ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்டதாலும், மேற்படி பிரிவினருக்கு நியாயமான இட ஒதுக்கீடுமுறை கொண்டுவரப்பட்ட பின்னர், இதன் பயன்பாடு அற்றுப்போய் விட்டதாலும், இடஒதுக்கீட்டுக் கொள்கையுடன் சேர்த்து முன்னுரிமை முறையை இனி பின்பற்ற வேண்டிய அவசியம் இல்லை என்றும் ஆசிரியர் தேர்வு வாரிய தலைவர் பார்வை இரண்டு மற்றும் நான்கில் காணும் தனது கடிதங்களில் தெரிவித்து அரசின் தெளிவுரையைக் கோரியுள்ளார்.

3. பார்வை மூன்றில் காணும் தனது கடிதத்தில் முன்னுரிமை வழங்குவது குறித்து அரசு மட்டத்தில் முடிவு செய்யலாம் என தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் கருத்து தெரிவித்துள்ளது.

4. இந்நிலையில், முன்னாள் இராணுவத்தினர் மற்றும் ஆதரவற்ற விதவைகள் ஆகியோர் ஆதரவற்ற சூழ்நிலையில் இருப்பதாலும், அவர்களின் சமூக, பொருளாதார நிலைமை மோசமாக இருப்பதாலும், அவர்களுடைய பொருளாதார நிலைமையை மேம்படுத்தும் பொறுப்பு அரசுக்கு இருப்பதாலும், வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் ஆட்தேர்வு செய்வதில் ஏற்கனவே ஒதுக்கப்பட்ட முன்னுரிமை முறை இவர்களுக்கு தொடர்ந்து இருக்கலாம் என பார்வை ஐந்தில் காணும் கடிதத்தில் வேலைவாய்ப்பு (ம) பயிற்சி துறையின் சிறப்பு ஆணையர் பரிந்துரை செய்துள்ளார்.

5. மேற்காணும் பரிந்துரையினை அரசு கவனமாக பரிசீலனை செய்து, வேலைவாய்ப்பு (ம) பயிற்சி துறையின் சிறப்பு ஆணையரின் பரிந்துரையை ஏற்று, வேலைவாய்ப்பகம் மூலம் ஆட்தேர்வு செய்வதில், முன்னாள் இராணுவத்தினர் மற்றும் ஆதரவற்ற விதவைகளுக்கு ஏற்கனவே ஒதுக்கப்பட்ட முன்னுரிமை முறை தொடர்ந்து இருக்கலாம் என அரசு முடிவுசெய்துள்ளது என்பதனை தங்களுக்குத் தெரிவித்துக்கொள்ளப் பணிக்கப்பட்டுள்ளேன்.

தங்கள் உண்மையுள்ள,